**ஸ்ரீ குருப்யோ நம:**

**ஸ்ரீ ஆதி சங்கரரின் காலடியில்**

# பாதயாத்திரை தாம்பரத்திலிருந்து காஞ்சி சங்கரமடம் வரை

**காஞ்சி ஆச்சார்யர்களின் விஸ்வரூப யாத்திரையில் செப்டம்பர் மாதம் 3,4 தேதிகளில் கலந்து கொள்ள அழைக்கிறோம்**

சனாதன தர்மத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காகவும், நாட்டின் ஒற்றுமைக்காகவும் ஆதி சங்கரர் இருமுறை பாரத தேசம் முழுவதும் பாத யாத்திரையாக சென்றுள்ளார். காஷ்மீர், பத்ரிநாத், பூரி, கன்யாகுமாரி, துவாரகா போன்ற எல்லா இடங்களுக்கும் அவர் சென்ற சான்று உள்ளது.

ஆதி சங்கரரை பின் பற்றி நம்முடைய நடமாடும் தெய்வமாகிய பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளும், பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சுவாமிகளும் பாரதத்தின் எல்லா பகுதிகளுக்கும் கால்நடையாக சென்று வேத பாடசாலைகளும், கல்வி நிறுவனங்களும், மருத்துவ நிறுவனங்களும் நிர்மாணித்து உள்ளார்கள்.

பாதயாத்திரை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் மிகுந்த பலன் அளிக்கக் கூடியது. பாதயாத்திரை திடசித்தத்துடன் கூடிய தீர்மானத்துடன் எடுத்த காரியம் முடியும் வரை சற்றும் மனம் தளராமல் செய்து முடிக்க கூடிய ஒன்று. இதைப்போன்ற புனித பயணம் நம் வாழ்க்கை முறையை சீர்செய்யும். பாதயாத்திரை செய்யும் தினங்களில் நாம் கடவுள் நினைவாகவே இருப்பதால் மற்ற எல்லா எண்ணங்கள்
செயல்களில் இருந்தும் விலகி கவலை அற்ற ஒரு சூழ்நிலையை அடையலாம். பங்கு கொள்பவர்களின் இடையே ஒற்றுமையும் உடல் ஆரோக்யமும் நிலவும்.

காஞ்சி காமகோடிபீட ஆச்சார்யர்களின் அனுக்ரதுடன் இந்தப்

பாதயாத்திரை தாம்பரத்திலிருந்து காஞ்சி மடம் வரை
ஆச்சார்யர்களின் விஸ்வரூப யாத்திரையில் (4-9-2009)
பங்கு கொள்வதற்க்காக ஏற்ப்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

**தாம்பரத்திலிருந்து காஞ்சி ஸ்ரீ மடம் வரையில் 55 கீ.மீ. தூரத்தை இரண்டு நாட்களில் மிகவும் சுலபமாக காலை சிற்றுண்டி, மாலை உணவு, இரவு உணவு, நடுநடுவே ஊட்டச்சத்துள்ள ஆகாரங்கள் மற்றும் தங்கும் வசதிகளுடன் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.**

ஆரம்பத்திலுருந்து பாதயாத்திரை முடியும் வரை பக்தர்களின் எல்லாவிதமான தேவைகளும் பூர்த்தி செய்து வைக்கப்படும். கட்டணம் கிடையாது.

தாளுளாள் தாமரையினாள் என்று வள்ளுவரும் நடந்தால் ஸ்ரீதேவி என்று பெரியவர்களும் உழைப்பின் உன்னதத்தையும் நடையின் சிறப்பையும் கூறியுள்ளார்கள்.

**பின் குறிப்பு: உங்கள் உடமைகளை எடுத்துச் செல்ல வாகன வசதி செய்யப்பட்டு உள்ளது.**
**டார்ச், தண்ணீர் பாட்டில், தலைக்கு கேப், உபயோகித்த ஹவாய் செருப்பு, பெரிய பிளாஸ்டிக் ஷீட் (வழியில் உட்காரவதற்கும், மழைக்க்காகவும்) கொண்டுவரவும்.**